


புதுடெல்லியில், நேற்று முன்தினம் (08.01.2026) ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முனைவர் வீரேந்திர குமார் தலைமையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 8வது கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் சார்பாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார். மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்/அரசு சிறப்பு செயலாளர் ம.லட்சுமி., உடனிருந்தார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று முன்தினம் (08.01.2026) திருச்சிராப்பள்ளி ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மாணவ, மாணவிகளுக்கு உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளை வழங்கி விழா சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன். மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், ஜோசப் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! தென்னலூர் எம்.பழனியப்பன் வரவேற்புரை! துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை அன்னவாசல் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - அமைச்சர்கள் கே.என்.நேரு - எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜன. 10 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் மேற்கு ஒன்றியம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (10.1.2026 - சனிக்கிழமை), அண்ணா திடல் மலைக்குடிப்பட்டியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

அன்னவாசல் மேற்கு ஒன்றிய செயலாளர் தென்னலூர் எம்.பழனியப்பன், அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ். சந்திரன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

மு.பி.மணி, கே.ஆர். என். போஸ், மு.பி.ம. சத்தியசீலன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஓ.எஸ். வெங்கடாச்சலம், எம். கோவிந்தராஜ் , எம்.செந்தில்குமார், டி.செல்வம், எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, இ.செந்தில்ராஜா, பி.மாரிமுத்து, பி.வி.எஸ். பாண்டியராஜா, கே.கே.எம். கார்த்தி, பாக்கியராஜ், வனிதா போஸ், ஆர்.விஜயக்குமார், டி.கணேசன், இராஜேஸ்வரி செந்தில். குமார், கல்யாணி மாரிமுத்து, கை.பழனிச்சாமி, பி.இராசப்பன்,'யு.கணேசமூர்த்தி, என்.ஏ.வடிவேல், ஏ.சுப்பையா, எஸ்.கணேசன், வயல் கணேசன், பி. மாரிமுத்து எம்.கருப்பையா, சென்னை சிவா, ஏ.கோவிந்தராஜ், இராஜேந்திரன், மதியநல்லூர் ராமச்சந்திரன், வெள்ளைச்சாமி, சண்முகம், கட்டகுடி பி.சுப்பிரமணியன் ஆர்.ஆர்.எஸ்.எம். சுரேந்தர், சாங்கிராப்பட்டி ரவி, டி.சண்முகம், கே.ஆர். ஜி.வேலுச்சாமி, வி.சி. பரஞ்சோதி, டி.சுப்பிரமணியன், குமாரசாமி, கே.சண்முகம், ஜி.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே. என். நேரு, புதுக் கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் , தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். இந்நிகழ்வுகளில் த.சந்திரசேக ரன், அஞ்சுகம் பூபதி, வை. விஜயக்குமார், சொ. தமிழினியன், எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் கொண்டைமான், சு.சண்முகம், பி.டி.அரசக்குமார், புதுகை விஜயா, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், வி.என்.மணி, எஸ். அசோக்பாண்டியன், அரு. வீரமணி, சுப.சரவணன், எஸ்.எஸ்.கருப்பையா,

பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ். எம்.எம். பாலு, முனைவர் செ.குறிஞ்சிவாணன், என்.சாத்தையா, சி.ஆர்.வி.சித்ரா, முல்லை முபாரக், ஆர். செல்லத்துரை, எட்வர்ட் சந்தோஷ், எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷித், இளஞ்சேரன் முத்துச்சாமி, புல்வயல். சுந்தர்ராஜன், செல்லம் அசோக்குமார், மகேஷ்குமார், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், எஸ்.சிவக்குமார், வள்ளிக்கண்ணு பழனிச்சாமி, மீனா பாண்டியன், பாட்ஷா, எம்.ஆர்.அன்பழகன், கே.ஜி.எஸ்.சுகுமாறன்,

சிவசப்பிரமணியன். சுரேஷ்குமார், சு.அழகர், ஐஸ் கணேசன், ஒன்றிய கழக செயலாளர்கள்

என்.சேட்டு, சி.சண்முகம், தவ.பாஞ்சாலன், வெ.முத்துக்கிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, மு.க.ராம கிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், கீரை. அண்ணாத்துரை, உ.முருகேசன் மாவட்ட அணி அமைப்பாளர்கள் உரக்கடை எம். கருப்பையா, ஆர்.டி.ஆர். ராமசாமி, டி.எம்.ஆர். ராமமூர்த்தி, அ.பிரபா, ஆர். உஷாராணி, வி.என்.எம். பாலு, சி.அரங்கநாயகம், வி.ஜி.ஆர்.மணிவண்ணன் புத்தரம்பூர் எம்.சுப்பையா, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், க.கவிவேந்தன், செந்தாமரை பாலு,

என்.வீரையய்யா, எம். ராஜா தவசுமணி, சூசை ராஜ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கிளைக் கழக நிர்வா கிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் அன்னவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து நன்றி கூறுகிறார்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000 /– ரொக்கம் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருப்பூர் மாநகராட்சி, குப்பாண்டம் பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப் பணம், பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிரபு, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதலியார்சத்திரம், காஜா பேட்டை, ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 3000 ரொக்கம் மற்றும் பொங்கல் பரிசு அடங்கிய பை மற்றும் ஒரு முழு நீள கரும்பினை பொதுமக்களுக்கு வழங்கினார்.

### தஞ்சை மத்திய மாவட்டத்தில்

# திராவிடப் பொங்கல் சமூகநீதிக்கான திருவிழாக் கொண்டாட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், ஜன. 10 -

தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் தி.மு.க. சார்பில் சார்பில் திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் திராவிட பொங்கல் சமூக நீதிக்காக திருவிழா கொண்டாட்டம் என்ற தலைப்பில் 31.12.2025 அன்று மாண்புமிகு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக உடன்பிறப்புகளுக்கு எழுதிய "உங்களில் ஒருவன்" கடித அறிவிப்பிற்கிணங்க தஞ்சாவூர் மத்திய மாவட்டத்தில் ஒன்றிய பகுதிகளில் கீழ்காணும் விவரப்படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது.




விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் அணிகள் www.dravidapongal.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கீழ்க்கண்டவாறு திராவிட பொங்கல் சமூக நிதிக்கான திருவிழா போட்டிகள் நடைபெற உள்ளது.

10.01.2026 சனிக்கிழமை திருவோணம் வடக்கு ஒன்றியம், தோப்பு விடுதி கிரிக்கெட் போட்டி, 13.01.2026 செவ்வாய்க்கிழமை பூதலூர் வடக்கு ஒன்றியம், ஒன்பது வேலி கைப்பந்து போட்டி, 10.01. 2026 சனிக்கிழமை மற்றும் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை தஞ்சை தெற்கு ஒன்றியம் மாப்பிள்ளை நாயக்கன்பட்டி, கைப்பந்து போட்டி, 10.01.2026 சனிக்கிழமை தஞ்சை மேற்கு ஒன்றியம், சித்திரக்குடி மாதா கோவில் தெரு ஓட்டப்பந்தயம், இசை நாற்காலி, 09.01.2026 வெள்ளிக்கிழமை திருவையாறு வடக்கு ஒன்றியம், விளாங்குடி ஓட்டப்பந்தயம் கோலப்போட்டி, 10.01.2026 சனிக்கிழமை

மற்றும் 11.1.2026 ஞாயிற்றுக்கிழமை பூதலூர் தெற்கு ஒன்றியம் மனையேறிப்பட்டி கிராமம், கபடி போட்டி, 10.01.2026 சனிக்கிழமை ஒரத்தநாடு வடக்கு ஒன்றியம், காசாநாடு கோவிலூர் கபடி போட்டி, ஓட்டப்பந்தயம், 09.01.2026 வெள்ளிக்கிழமை திருவையாறு தெற்கு ஒன்றியம் மோசஸ்புறம் கிரிக்கெட் போட்டி.

மேற்கண்டவாறு தஞ்சை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கோவை ஸ்ரீ அன்னபூர்ணா உணவகம் ஸ்ரீ கௌரிசங்கர் குழுமத்தின் துணைத்தலைவர் தா.சுந்தரராஜன் அவர்களின் மறைவையொட்டி அன்னாரது உடலுக்கு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன், மாவட்டக் கழக செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ.ரவி (கோவை வடக்கு), தளபதி முருகேசன் (கோவை தெற்கு) உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/– ரொக்கம் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்ததை தொடர்ந்து கோவை தெற்கு மாவட்டம், சூலூர் சட்டமன்ற தொகுதி, சூலூர் மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட ஊராட்சிகளில் உள்ள நியாய விலை கடையில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கினார். இதில் சூலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.வி.அன்பரசு, அரசூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஏ.வி.கோவிந்தராஜ், ஒன்றிய துணை செயலாளர் சீனிவாசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம்,அதியமான்கோட்டைகூட்டுறவு நியாய விலைக் கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், மற்றும் தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. ஆகியோர் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி,ஒரு கிலோ சர்க்கரை,ஒரு முழுக்கரும்பு மற்றும் ரூ.3000 ரொக்கம் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்புகள் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினர்.உடன் கோட்டாட்சியர் காயத்ரி, முன்னாள் எம்.எல்.ஏ தடங்கம்.பெ.சுப்ரமணி, ஒன்றிய செயலாளர் ஏ.எஸ்.சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# திருவாரூர் மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அறிக்கை!

திருவாரூர், ஜன. 10 -

திருவாரூர் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று ( 10.1.2026 - சனிக்கிழமை) நடைபெற இருக்கிறது . இது குறித்து மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது :

கழகத்தலைவர் ,தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களின்படி திருவாரூர் மாவட்டக்கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (10.01.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு திருவாரூர் வர்த்தக சங்க திருமண அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் அவர்களது தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் தமிழ்புத்தாண்டு தைப்பொங்கல் விழா ,திராவிட பொங்கல் விளையாட்டு போட்டிகள், ஜனவரி 26 மகளிர்



கள் பங்கேற்கும் வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மாநாடு குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனைகள் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு சட்டமன்ற தேர்தல் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய ,நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்களும், சார்பு அணிகளின் அமைப்பாளர்களும் தவறாமல் வருகைதந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு 42, செல்லாண்டியம்மன் துறை குடியிருப்பு எதிரில் அமைந்துள்ள நுண் உரம் செயலாக்கம் மையத்தை (MCC CENTER) மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.